சிறுவோம்! இயேசுவுக்குப்புகழ்! சிறுக்குவோம்!

'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :X ஜூன் 2019 சான்று : 6

## இயக்க வைக்கும் ஆவியார்

அர்ப்பண விழா - காளையார்கோவில்

அருளமுது ஆராதக்குழுக் கூடுகை
- அருள்சான்று நிலையம்

## பாசத்திற்குரிய நற்செய்திப் பணிக்குடும்பமே

நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள் (மத் 5:13) என்ற நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் ஒப்பற்ற வார்த்தைக்கேற்ப மண்ணுலகிற்கு நாம் ஒவ்வொருவரும் உப்பாய் இருக்க செபித்து வாழ்த்துகிறேன். நம் குடும்பத்தில் புதிதாய் இணைந்திருக்கிற 109 (ஆண்கள் 29, பெண்கள் 80) பணியாளர்களை மீண்டும் ஒரு முறை வாழ்த்தி வரவேற்கிறேன். மே மாதத்தில் (25, 26 தேதிகளில் நடந்த புதிய பணியாளர் அறிமுகப் பயிற்சியில் கலந்து கொண்டு ஓர் ஆண்டு பயிற்சிபெற இருக்கிற பயிற்சிப் பணியாளர்களையும் அன்போடு வரவேற்கிறேன்.

நாம் தொடர்ந்து இக்கடிதம் வழியாக பல்வகைப் பரவசப் பேச்சு (அந்நிய பாஷை) கொடை பற்றிச் சிந்தித்து வந்தோம். வருகிற செப்டம்பர் மாதம் 26, 27, 28 தேதிகளில் நடைபெறவுள்ள 'உப்பு' பணியாளர் கூடுகை பற்றிய முன் தயாரிப்புப் பணிகள் உள்ளதால் கூடுகைவரை 'உப்பு' பற்றிச் சிந்திக்கவிருக்கிறோம். அதே நேரத்தில் 'பல்வகைப் பரவசப் பேச்சு' பற்றிய உங்கள் அனைத்துச் சந்தேகங்களுக்கும் மற்றொரு பக்கத்தில் தொடர்ந்து எழுதப்படும். அதில் நாம் அனைவரும் தெளிவு பெறுவோம்.

உப்பு சாதாரணப் பொருள். அனைவரும் அறிந்த பொருள். அதை வைத்து ஆவிக்குரிய உன்னத உண்மைகளை நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து போதிக்கிறார். சாதாரண உப்பைக் கொண்டு அசாதாரண விளக்கங்களைத் தருகிறார். உங்கள் வீடு, இனம், குலம், நாடு என்று சொல்லாமல், 'மண்ணுலகிற்கு' உப்பாய் இருங்கள் என்று கூறுகிறார். இதிலிருந்து நாம் ஒரு பெரிய உண்மையைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, அகில உலகிற்கும் நாம் பயனுள்ளவர்களாய் வாழ பெரிய காரியங்களை எதிர்பார்க்கிறார். கிறிஸ்தவர்களே அப்படி வாழ வேண்டும் என்று அவர் எதிர் பார்க்கிறார் என்றால், பிரித்தெடுக்கப்பட்ட நாம் எப்படி வாழ வேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பார் என்பதை உணர்ந்து கொள்வோம்.

நீங்கள் உப்பின் தன்மை கொண்டிருங்கள் (மாற் 9:50) என்று தெளிவாகக் கூறுகிறார். நாம் வருகிற நான்கு மாதங்களிலும் இந்த இரண்டு இறைவார்த்தைகளை மட்டுமே (மத் 5:13, மாற் 9:50) சிந்திக்கவிருக்கிறோம். உப்பின் முக்கியத்துவம் பற்றி உரோமை அரசில் இருந்த பிளீனி (கிபி 62) உப்பு மற்றும் ஆரிய வெளிச்சம் ஆகியவற்றைப் போன்ற அதிகம் பயன் நிறைந்தவை வேறெதும் இல்லையென்று எழுதியுள்ளார். இயேசு ஆண்டவரின் காலத்தில் பணிக்கு ஊதியமாக உப்பு தரப்பட்டது. உப்பு 14,000க்கும் அதிகமான பணிகளைச் செய்கின்றது என்று கலைக்களஞ்சியங்கள் கூறுகின்றன. கிரேக்கர்கள் உப்பைப் புனிதப் பொருளாக நினைத்தனர்.

பழைய ஏற்பாட்டுப் பலி முறைகளில் உப்பு மிகவும் முக்கியம் வாய்ந்ததாக இருந்தது (லேவி 2:13, எசே 43:24) எந்தப் பலி பொருளும் உப்பிடப்பட வேண்டும் கடவுளின் உடன்படிக்கையாகிய உப்பைக் குறையவிடக் கூடாது (லேவி 2:13) என்று எழுதப்பட்டுள்ளது. உப்பு தூய்மைக்கு அடையாளமாக இருக்கிறது. உப்பு சேர்க்கப்பட்ட துப்புரவான புனித நறுமணக்கட்டி (விப 30:35) என்று எழுதப்பட்டுள்ளது. எரிக்கோ நகர மக்கள் இங்குள்ள தண்ணீர் நல்ல தண்ணீர் இல்லை என்று எலிசாவிடம் சொன்ன மாத்திரத்தில் ஒரு புதுக்கிண்ணத்தில் கொஞ்சம் உப்பைக் கொண்டு வாருங்கள் என்று சொல்லி அவ்வுப்பைத் தண்ணீரில் கொட்ட அது தூய்மையடைந்தது. நல்ல நீராக மாறியது என்று (2

அரச 19:22ல்) வாசித்து அறிகிறோம். இன்றும் நம் திருப்பலிக் கொண்டாட்டத்தில் நம் பாவங்களுக்காக மனம் வருந்தும் போது எலிசாவின் இச்செயலை நினைவூட்டி "தண்ணீர் தூய்மை பெற உப்பிட வேண்டும் என்று எலிசா வழியாகக் கற்பித்தீர் இத்தண்ணீர் தெளிக்கப்படும் இடமெல்லாம் தீயோனின் தாக்குதல் அனைத்தையும் தோல்வியுறச் செய்வீராக" என்று கூறி நம்மீது உப்பிடப்பட்ட தூய நீர் தெளிக்கப்படுகிறது. நம் பாவங்களிலிருந்து தூய்மை பெறுவது மட்டுமல்ல பாவத்தை எதிர்க்கும் ஆற்றல் பெறுகிறோம்.

பிறந்த குழந்தையைத் தூய்மைப்படுத்த உப்பூநீர் பயன்படுத்தப்பட்டுள்ளது (எசே 16:4) என்று தெளிவாக அறிகிறோம். இயேசு ஆண்டவரும் உப்பைத் தூய்மைக்கும் அடையாளமாகக் குறிப்பிடுகிறார். பலிப்பொருள் உப்பால் தூய்மையாக்கப்படுவது போல ஒவ்வொருவரும் நெருப்பால் தூய்மையாக்கப்படுவர் (மாற் 9:49) என்று கூறியிருக்கிறார். உப்பின்தன்மையென்று பார்க்கும் போது முதல் தன்மையாக "தூய்மையாக்குதல்" என்ற பண்பு திகழ்கிறது.

பழைய ஏற்பாடு முழுவதும் "உங்களைத் தூய்மைப்படுத்துங்கள்" என்ற கட்டளை அதிகமாகக் காணப்படுகிறது. தொடக்க நூல் முதல் (35:2) இக்கட்டளை தொடங்குகிறது. தூய்மை அவரது சிறப்பான முதன்மையான பண்பு என்பது நாமனைவரும் அறிந்ததே. என் தூய்மையை வெளிப்படுத்துவேன் என்றும் அதன்மூலம் மாட்சியுறுவேன் என்றும் (லேவி 10:3) கூறியுள்ளார், திருவிலியைத்தின் அனைத்துப் புத்தகங்களுமே தூய்மைபற்றி அதிகம் பேசுகிறது.

உங்களைத் தூய்மைப்படுத்தி தூயவராய் இருங்கள். ஏனெனில் நான் தூயவர் (லேவி 11:44,45) தூயோராய் இருங்கள். ஏனெனில், உங்கள் கடவுளும் ஆண்டவருமான நான் தூயவர் (லேவி 19:1) என்று கடவுள் கட்டளையிடுவதை வாசிக்கிறோம். இதுபோன்று பல இடங்களிலும் வாசிக்கிறோம். "உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருப்பது போல நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவர்களாய் இருங்கள்" (1 பேதுரு 1:15) என்று நமது தலைமைத் திருத்தூதர் தன் மடலில் ஆழமாகப் பதிவு செய்கிறார். எனவே உப்பின் முதலும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பண்பாகிய "தூய்மைப்படுத்துதல்" என்ற பண்பைக் கொண்டிருப்போம். முதலில் நாம் தூய்மையாவோம். பின்பு சமுதாயத்தைத் தூய்மைப்படுத்த முயற்சி எடுப்போம். மண்ணுலகில் உள்ளவர்கள் தூய்மையாய் வாழ என்னென்ன முயற்சிகள் எடுக்க வேண்டுமோ அவற்றை எடுப்போம். நம் வாழ்வாலும் வார்த்தையாலும் தூய்மையின் அவசியத்தையும், தூய்மை பெறும் வழிகளையும் அறிவிப்போம். அதற்காக நமது 'உப்பு' என்ற கூடுகையை நோக்கி நகர்வோம். உப்பின் மகத்தான பணியாகிய தூய்மையாக்கும் பணியைச் சிறப்பாகச் செய்ய இறையாற்றல் வேண்டுவோம். தொடர்ந்து உப்பின் தன்மைகளை ஆராய்ந்து, தியானித்து உப்பின் தன்மைகளை நாம் பெற்று சான்று வாழ்வு வாழ முயற்சி எடுப்போம். தூய்மை பெறுவதற்கு ஒரே வழி கடவுளோடு ஒன்றித்து வாழ்வது மட்டுமே ஆகும். நாமும் கடவுளோடு ஒன்றித்து, இணைந்து வாழ்ந்து பிறரையும் வாழவைப்போம். உப்பின் தன்மைகளைப் பெற்று வாழ ஒருவர் மற்றவர்களுக்காய் செபிப்போம்.

---

சென்ற மாத இதழில் (மே 2019) இரண்டாவது பக்கத்தில் 3வது 4வது பத்திகளுக்கு இடையே வர வேண்டிய செய்தி அச்சுப் பிழை காரணமாக வரவில்லை. அந்தச் செய்தி இந்த இதழில் அச்சிடப்படடுள்ளது. இணைத்து வாசிக்கவும்.

---

பரவசப் பேச்சு பேசுவதாய் இருந்தால் இருவர் பேசலாம். மிஞ்சினால் மூவர் பேசலாம். ஆனால் ஒருவர் பின் ஒருவராகப் பேச வேண்டும். ஒருவர் அதற்கு விளக்கம் கூற வேண்டும். ஆனால் விளக்கம் கூறுவோர் இல்லையெனில் அவர்கள் திருச்சபையில் அமைதி காக்கட்டும். தங்கள் உள்ளத்தில் கடவுளோடு பேசட்டும்.

இறைவாக்கினர்கள் பெறும் ஏவுதல்கள் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவைதான். ஏனெனில் கடவுள் குழப்பத்தை ஏற்படுத்துகிறவர் அல்ல. அமைதியை ஏற்படுத்துபவர். எல்லோரும் பிணி தீர்க்கும் அருள் கொடைகளை பெற்றவர்களா? எல்லோரும் பரவசப் பேச்சு பேசுகிறவர்களா? எல்லோரும் விளக்கம் அளிப்பவர்களா? இல்லையே. எனவே நீங்கள் மேலான அருள் கொடையையே ஆர்வமாய் நாடுங்கள் எல்லாவற்றையும் விட சிறந்த நெறி ஒன்றை நான் உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேன். அதுதான் அன்பு (1கொரி 14:5-6, 9-12, 1,4, 1 கொரி 12:7, 1 கொரி 14:16-19, 22-25, 27,28,32,33, 1 கொரி 12:30,31, 1 கொரி 13) என் பாசத்திற்குரிய சகோதர, சகோதரிகளே. மேலே கண்ட இறைவார்த்தைகளைக் கவனமுடன் தியானித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். எல்லாமே என் சொந்த வார்த்தை இல்லை. ஒரே ஆவியானவர் வழியாக் கடவுள் தம்முடைய திருவுளத்தையும். செயலையும் யார் மூலமாகச் செயல்படுத்த வேண்டுமோ அவர்களுக்கு கொடுத்து நிறைவேற்றுகிறார்.

---

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்.

உங்கள் சகோதரர்

நற்பணி **அ. சகாயராஜா**

## இனம் காணப்பட்டோர் அறிமுகப்பயிற்சி

- சிவகங்கை மறைமாவட்டம் இனம் காணப்பட்டோர் அறிமுகப்பயிற்சி மே 25ம் தேதி அன்று பாம்பன் கிரிகணி மையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M.மரிய கிரகோரி, நற்பணி J.மேரிபுஷ்பம், நற்பணி J.டோமினிக் ஆகியோர் வழிநடத்தினர்.
- சிவகங்கை மறைமாவட்டம் இனம் காணப்பட்டோர் அறிமுகப்பயிற்சி மே 26ம் தேதி அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி K.மரியகிரகோரி, நற்பணி G.M.S. ராணி, நற்பணி J.அலெக்ஸாண்டர் ஆகியோர் வழிநடத்தினர்.
- சிவகங்கை மறைமாவட்ட இனம்காணப்பட்டோர் அறிமுகப்பயிற்சி மே 26ம் தேதி அன்று இராமநாதபுரம் குழந்தை இயேசு பள்ளியில் நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.தனிநாயகம், நற்பணி A.ஞானசெல்வி ஆகியோர் வழிநடத்தினர்.
- சிவகங்கை மறைமாவட்டம் இனம் காணப்பட்டோர் அறிமுகப்பயிற்சி 26ம் தேதி அன்று சிவகங்கை வியான்னி அருள்பணி மையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M.சேவியர், நற்பணி L.ஜோசப் இருதயம் ஆகியோர் வழிநடத்தினர்.
- சிவகங்கை மறைமாவட்டம் இனம் காணப்பட்டோர் அறிமுகப்பயிற்சி மே 26ம் தேதி அன்று சாயல்குடி புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.யூஜின் அமல்ராஜ், நற்பணி A.சந்திரபுஷ்பா, நற்பணி M.அருள்மரிய நாயகம் ஆகியோர் வழிநடத்தினர்.

தொடர்ச்சி 23ம் பக்கம்

# கடந்த மாதச் செயல்பாடுகள்

- மே 01ம் தேதி காயாவயல் அமைதியகத்தில் அருள்அமுது ஆதாரக்குழு கூடுகை செபவழிபாடு நடைபெற்றது. 29பேர் இணைந்து செபிக்க இவ்வழிப்பாட்டை நற்பணி L.ஆரோக்கியசாமி, நற்பணி S.ஆரோக்கியசாமி, நற்பணி T.ரோஜாமணி ஆகியோர் வழிநடத்தினார்.

- மே 01ம் தேதி பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருள் அமுது ஆதாரக்குழு கூடுகை செபவழிபாடு நடைபெற்றது. 35பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி A.மார்சல் மேரி, நற்பணி புஷ்பம், நற்பணி A.ஜான்சிமேரி ஆகியோர் வழிநடத்தினர்.

- மே 03ம் தேதி அன்று முதல் வெள்ளி ஆராதனை ஆர்.எஸ்.மங்கலம் தூய ஆவியார் கோவிலில் நடைபெற்றது. நற்பணி J.மேரிபுஷ்பம் வழிநடத்த அனைவரும் இணைந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினார்.

- மே 04ம் தேதி அன்று இடைக்காட்டூர் திருஇருதய ஆண்டவர் திருத்தலத்தில் பரிந்துரை செபம் நடைபெற்றது. நற்பணி X.சகாயலூர்யி ஆரோக்கியசாமி, நற்பணி P.பிராகசாம், நற்பணி S.ஜோசப், நற்பணி T.ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினர்.

- மே 10, 11 தேதிகளில் பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் பயிற்சி பெற்ற புதிய பணியாளர்களுக்கு தெளிந்து தேர்ந்தல் தியானம் நடைபெற்றது. 109 பேர் கலந்து கொண்ட இத்தியானத்தை செயலர், நற்பணி A.சகாயராஜா, நற்பணி M.மரியகிரகோரி, நற்பணி J.மேரிபுஷ்பம், நற்பணி A.சத்தியேந்திரன், நற்பணி J.ஆரோக்கியசாமி, நற்பணி M.சேவியர் ஆகியோர் வழிநடத்தினர்.

- மே 12ம் தேதி காளையார்கோவில் புனித அருளானந்தர் கோவிலில் பயிற்சி பெற்ற புதிய பணியாளர்கள் அர்ப்பணம் ஏற்கும் விழா சிவகங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு செ.சூசைமாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அர்ப்பணம் ஏற்ற 109 பணியாளர்கள் சிவகங்கை மறைமாவட்ட நற்செய்திப்பணியாளர்களாக மேதகு ஆயர் அவர்களால் அருள்பொழிவு செய்யப்பட்டனர். இவ்விழாவை காளையார்கோவில் புனித அருளானந்தர் கோவில் பங்குப்பணியாளர் அருள்பணி சூசைஆரோக்கியம் அவர்கள் பொறுப்பேற்று ஒருங்கிணைத்தார்கள். காளையார்கோவில் வட்டார நற்செய்திப் பணியாளர்கள் உடன் இணைந்து விழா சிறக்க உழைத்தனர். பங்குத்தளமே விழாகோலம் பூண்டது சிறப்பாக இருந்தது. அனைத்து வட்டாரங்களிலுமிருந்து பணியாளர்கள் பலர் வந்து கலந்து கொண்டனர்.

- மே 19ம் தேதி அன்று புஷ்பவனம் புனித குழந்தை இயேசுவின் தெரசாள் ஆலயத்தில் பங்குத் திருவிழாவை முன்னிட்டு நற்கருணைப் பவனி நடந்தது இப்பவனியை செயலர், நற்பணி K.ஜஸ்டின் கபிரியேல் ஆகியோர் வழிநடத்தினர்.

# புதிய வட்டாரங்கள் உதயம்

சிவகங்கை மறைமாவட்ட நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழுவின் சிறப்பான ஒருங்கிணைப்பிற்காக கீழ்கண்டவாறு புதிய வட்டாரங்கள் உருவாக்கப்படடுள்ளன. இவை ஜூன் 2019 முதல் செயல்படத் துவங்கும்.

| வ. எண் | ஒருங்கிணைந்த வட்டாரம் | புதிய வட்டாரம் | கண்காணிப்பாளர் | தொடர்பாளர் |
|---|---|---|---|---|
| 1. | மானாமதுரை | மானாமதுரை | I. புஷ்பராஜ் | D. குழந்தைதெரஸ்<br>K. சகாயராணி<br>M. மனுவேல்தாஸ் |
| 2. | மானாமதுரை | இடைக்காட்டூர் | M. சேவியர் | M.S. சூசைமாணிக்கம்<br>L. ஆரோக்கியசாமி |
| 3. | கமுதி | சாயல்குடி | A. சந்திரபுஷ்பா | T. மரிய சந்திரிகா<br>A. மரிய புஷ்பம்<br>C. கிருபா |
| 4. | இராம்நகர் | தேவகோட்டை | C. கபிரியேல் | A. ஜோதி மலர்<br>M. ஆரோக்கிய மேரி<br>M. பங்குராஜ் |

புதிய வட்டார கண்காணிப்பாளர்களுக்கு செபங்களுடன் கூடிய வாழ்த்துக்கள்

## பங்குத் தளங்களில் தொடர் களப்பணி- ஜூன் 2019

| வ.எ | நாள் | பங்கு மற்றும் கிராமம் | பணியாளர்கள் |
|---|---|---|---|
| 01 | 22-23 | இருதயபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி I.செல்லதாய் |
| 02 | 22-23 | மூப்பையூர் / விளாங்காட்டூர் | நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி J. குழந்தைதெரஸ் |
| 03 | 22-23 | திருவெற்றியூர் | நற்பணி P. பிரகாசம்<br>நற்பணி A. சேவியர் |
| 04 | 22-23 | நானாக்குடி | நற்பணி S. அருளானந்தம்<br>நற்பணி S. கஸ்பார் |
| 05 | 22-23 | சிலாமேகநாடு / தெற்கு செய்யனேந்தல் | நற்பணி I. செபஸ்தியான் (ஆவுடைபொய்கை)<br>நற்பணி R. அந்தோணி |
| 06 | 22-23 | கமுதி / மண்டலமாணிக்கம் | நற்பணி I. ஜோசப் சேவியர்<br>நற்பணி M. மனுவேல்தாஸ் |
| 06 | 22-23 | சிங்கபுணரி | நற்பணி P. மரிய ஜீவநாதன்<br>நற்பணி A. ஜெயசீலன் |
| 08 | 22-23 | ஆவுடைபொய்கை /தம்பிபுரம் | நற்பணி A. வியாகுலம்<br>நற்பணி A. ஆரோக்கியம் |
| 09 | 22-23 | கணக்கன்பட்டி- உபவாச நற்செய்திக் கூட்டம் | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>நற்பணி R. ராஜ்குமார் |

# நம்மை நாம் காத்துக்கொள்வோம்

மனிதன் என்பவன் அடக்கி ஆளப்பிறந்தவன். ஆனால் எல்லாவற்றையும் அடக்கி ஆளும் ஒரு மனிதன் தன்னை அடக்கி ஆளமுடியாமல் தோல்வி அடைகிறான். எத்தனையோ காரியங்கள் செய்து இருக்கிறோம். ஏன் ஆச்சரியப்படும்படியாக கூட சிலவற்றை செய்து இருக்கிறோம். வீடு, வாகனம், சொத்து இவைகள் எல்லாம் வைத்து இருக்கும் நாம் நம்மை ஆளமுடிகிறதா? நம்மை நாம் வெற்றி கொண்டிருக்கிறோமா? மனிதர் உலகமெல்லாம் தனதாக்கி கொண்டாலும் தனது ஆன்மாவை இழப்பான் எனில் அவனுக்கு என்ன பயன்?(மத் 16:26) உயர்ந்த கல்வி கற்று உயர்ந்த பதவியில் இருந்தால் ஒரு மனிதன் வெற்றி அடைந்து விட்டான் என சொல்லமுடியுமா? அல்லது நாட்டையே ஆளத் தெரிந்தவன் தன்னை ஆளத்தெரிந்து இருக்கிறானா? இல்லை. தன்னை வென்றவனே உலகை வென்றவன். நம்மை நாம் வென்றிருக்கிறோமா? சிந்திப்போம்.

கடவுள் மனிதனை தனது சாயலாக படைத்தாலும் மனிதனின் இதய சிந்தனை இளமையிலிருந்தே தீமையை உருவாக்குகிறது. உலகம் தொடர்பானவற்றில் நம் ஆசைகள் கடவுளுக்கு விரோதமான செயல்களையே செய்தாக வேண்டும், அனுபவித்து ஆக வேண்டும் என்ற விருப்பம் நம்மையும் தாண்டி ஆளுமை செய்கிறது. ஊனியல்பின் செயல்களான பரத்தன்மை, கெட்ட நடத்தை, காமவெறி, சிலைவழிபாடு, பில்லி, சூனியம், பகைமை, சண்டைச்சச்சரவு, பொறாமை, சீற்றம், பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி (கலா 5 :19-21) அகியவை நம்மிடம் இருக்கின்றன. நம் மனதை நாம் ஆள முடியாமல் சாத்தான் ஆளுகை செய்கிறான். நான் எதை செய்ய விரும்பிகிறேனோ அதை செய்ய முடியவில்லை. எதை செய்யகூடாது என நினைக்கிறேனோ அதையே செய்கிறேன் என்றால் அதை நானாக செய்யவில்லை. என்னில் குடிக்கொண்டியிருக்கும் பாவமே செய்கிறது என்று பவுல் அடிகளார் கூறுகிறார் (உரோ 7:19-20).

நமது உடல் முழுவதும் கடவுளுக்கு சொந்தம். அவர் நினைத்தது போல நம்மை உருவாக்கினார். அவரது இரத்தத்தால் நம்மை விலைக்கொடுத்து வாங்கிவிட்டார். எனவே உடலால் கடவுளுக்கு பெருமை சேர்க்க வேண்டும்.

கைகளை இறைப்பணி செய்ய பயன்படுத்துவோம். நமக்கு பரிசாக கொடுத்திருக்கும் நாவை அவரைப் புகழ்ந்து பாடி ஆராதிக்கப் பயன்படுத்துவோம் (திப 16:25). நமது பார்வை ஆணவப் பார்வையாகவே, அகந்தையானப் பார்வையாகவோ இச்சை நிறைந்த பார்வையாகவோ இல்லாமல் நமது கண்களை கடவுளை நோக்கி இரக்கத்தோடு பார்க்கும் பார்வையாக பயன்படுத்துவோம். ஆண்டவரின் வாக்கை அறிவிக்கச் செல்ல நம் கால்களை பயன்படுத்துவோம். இறைவார்த்தை கேட்கவும் ஏழைகளின் கூக்குரலை கேட்டு உதவவும் நம் செவியை பயன்படுத்துவோம். நம் வாயை கேட்போர் பயன் அடையும்படி தேவைக்கு ஏற்றவாறு அருள் வளர்ச்சிக்கு ஏற்ற நல்ல வார்த்தைகளை பேச பயன்படுத்துவோம் (எபே 4:29). எதை பார்த்தாலும் சாப்பிட்டே ஆக வேண்டும் என்று நம் வாயை பயன்படுத்தாமல் உண்ணா நோன்பினால் கடவுளின் வார்த்தைக்கு கீழ்படிந்து வாழ்வோம். இவ்வாறாக, கடவுள் படைத்த உறுப்புகளால் கடவுளை மாட்சிமைப்படுத்துவோம்.

நமது உடல் இறைவன் தங்கும் ஆலயம் (1கொரி 3:16) எனவே அதை தூய்மையாக வைத்திருப்போம். வலிமையான பெரிய உருவமான யானையையும், கர்ச்சிக்கும் சிங்கத்தையும் அடக்கி ஆளும் நாம் நம்மை அடக்கி ஆளுகை செய்வோம். அழியாத நமது ஆன்மாவை நல்வழிப்படுத்த பயிற்சி எடுக்கிறோமா? உடலையும் ஆன்மாவையும் இறைவன் தங்கும் ஆலயமாக செய்து அதனால் நமது உடலின் ஏற்படும் தழும்புகளால் ஆன்மாவை உறுதிப்படுத்த ஒளியின் பாதையில் நடந்து செல்வோம்.

நற்பணி M.சேசுநேசன் C.K.மங்கலம்.

## புதிய நற்செய்திப் பணியாளர்களே வருக வருக!.

2019ல் அர்ப்பணம் ஏற்ற நற்செய்தி பணியாளர்கள் அனைவரையும் இயேசுவின் இனிய நாமத்தில் நற்செய்திப் பணிக்குடும்பத்தில் அன்புடன் வரவேற்கிறோம். - ஒருங்கிணைப்பாளர்

| வ.எ | பெயர் | பங்கு | வட்டாரம் |
|---|---|---|---|
| 01 | R. அந்தோணிதேவசகாயஹெர்மஸ் | இராமேஸ்வரம் | இராமேஸ்வரம் |
| 02 | S. டேவிட் | த. சூசையப்பர்பட்டணம் | தங்கச்சிமடம் |
| 03 | P. ஆராக்கியலதா | த. சூசையப்பர்பட்டணம் | தங்கச்சிமடம் |
| 04 | A. ஆரோக்கியரேசன் | த. சூசையப்பர்பட்டணம் | தங்கச்சிமடம் |
| 05 | J. வினி | த. சூசையப்பர்பட்டணம் | தங்கச்சிமடம் |
| 06 | C. ரோஸ் மேரி | த. சூசையப்பர்பட்டணம் | தங்கச்சிமடம் |
| 07 | A. ஹெலன் | த. சூசையப்பர்பட்டணம் | தங்கச்சிமடம் |
| 08 | R. சந்தன மேரி | த. சூசையப்பர்பட்டணம் | தங்கச்சிமடம் |
| 09 | M .குளோரியஸ் டயானா ஜூலி | தங்கச்சிமடம் | தங்கச்சிமடம் |
| 10 | S. நிர்மலா ராணி | தங்கச்சிமடம் | தங்கச்சிமடம் |
| 11 | L. அன்பு கிரேசி | பாம்பன் | பாம்பன் |
| 12 | A. பிரமிளா | பாம்பன் | பாம்பன் |
| 13 | P. அருள் பியோ | மட்டியரேந்தல் | இராமநாதபுரம் |
| 14 | G. ஜெய ராணி பிரிட்டோ | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 15 | A. ஜோஸ்பின் ஷர்மிலி | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 16 | A. சூசை அடைக்கலம் | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 17 | S. ஜாய்ஸ் மேரி | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 18 | S. சவேரிமாலினி | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 19 | F. செங்கோலம்மாள் | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 20 | A. ஜெயரஞ்சனி | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 21 | V. ஜோசப் கென்னடி | முத்துப்பேட்டை | முத்துப்பேட்டை |
| 22 | J. ஜோசப் தாஸ் | முத்துப்பேட்டை | முத்துப்பேட்டை |
| 23 | F. பிரான்சிஸ் இருதய மார்க்ஸ் | முத்துப்பேட்டை | முத்துப்பேட்டை |
| 24 | A. ஜெலிந்தா குயின் | முத்துப்பேட்டை | முத்துப்பேட்டை |
| 25 | L. பீட்டர் ஜேவாஸ் | முத்துப்பேட்டை | முத்துப்பேட்டை |
| 26 | A. ஆரோக்கிய சில்வியா | முத்துப்பேட்டை | முத்துப்பேட்டை |
| 27 | A. எமலின் | முத்துப்பேட்டை | முத்துப்பேட்டை |
| 28 | A. கமலிஸ் | கீழக்கரை | இராமநாதபுரம் |
| 29 | A. பெத்தானியா | கீழக்கரை | இராமநாதபுரம் |
| 30 | S. கரோலின் எமிலி | உலகநாதபுரம் | பரமக்குடி |
| 31 | A. மல்லிகா | உலகநாதபுரம் | பரமக்குடி |
| 32 | A. ராஜம்மாள் | உலகநாதபுரம் | பரமக்குடி |
| 33 | A. பாக்கிய மேரி | உலகநாதபுரம் | பரமக்குடி |
| 34 | A. தமிழரசி | உலகநாதபுரம் | பரமக்குடி |
| 35 | J. விக்டோரியா ராணி | உலகநாதபுரம் | பரமக்குடி |
| 36 | S. கஸ்மேரி | உலகநாதபுரம் | பரமக்குடி |
| 37 | S. மரிய குளோரி | உலகநாதபுரம் | பரமக்குடி |
| 38 | S. சூசைமேரி | உலகநாதபுரம் | பரமக்குடி |
| 39 | V. விமல்வைலட் ரோசரி | உலகநாதபுரம் | பரமக்குடி |
| 40 | K. சகாயராணி | பரமக்குடி | பரமக்குடி |
| 41 | S. அருள்பவுல்ராஜ் | சூராணம் | சாலைகிராமம் |
| 42 | R. ஸ்டீபன் | இளையான்குடி | சாலைகிராமம் |
| 43 | S. ஆரோக்கிய மேரி | இளையான்குடி | சாலைகிராமம் |
| 44 | T. மரிய சந்திரிகா | சாயல்குடி | சாயல்குடி |
| 45 | A. மரிய செல்வம் | சாயல்குடி | சாயல்குடி |
| 46 | V. ரூத் செல்வராணி | சாயல்குடி | சாயல்குடி |
| 47 | S. ரோஸ் மேரி | சாயல்குடி | சாயல்குடி |
| 48 | S. கிருபா | ரோச்மாநகர் | சாயல்குடி |
| 49 | C. மரிய பிரின்சி | ரோச்மாநகர் | சாயல்குடி |
| 50 | A. அன்னம்மாள் சிலுவை | ரோச்மாநகர் | சாயல்குடி |
| 51 | J. இருதய மேரி | ரோச்மாநகர் | சாயல்குடி |
| 52 | M. பாஸ்கரன் | கே.எம். கோட்டை | கமுதி |

| | | | |
|---|---|---|---|
| 53 | A. செல்வராணி | கே.எம். கோட்டை | கழுதி |
| 54 | P. ஆரோக்கியராணி | கே.எம். கோட்டை | கழுதி |
| 55 | P. அருள்மார்த்தாள் | கே.எம். கோட்டை | கழுதி |
| 56 | I. ஆரோக்கியமேரி | கே.எம். கோட்டை | கழுதி |
| 57 | A. அருள் மேரி கவிதா | கழுதி | கழுதி |
| 58 | K. சேசம்மாள் | கழுதி | கழுதி |
| 59 | M. ஜான் அருள் பீட்டர் | கழுதி | கழுதி |
| 60 | K. ஆரோக்கிய சகாயராஜ் | மானாமதுரை | மானாமதுரை |
| 61 | K. பெட்ரீசியா மேரி | மானாமதுரை | மானாமதுரை |
| 62 | A. சகாயராணி | இராஜகம்பீரம் | மானாமதுரை |
| 63 | J. அடைக்கலமேரி | இராஜகம்பீரம் | மானாமதுரை |
| 64 | K. ஜோஸ்பின் | இராஜகம்பீரம் | மானாமதுரை |
| 65 | I. சவரியம்மாள் | இராஜகம்பீரம் | மானாமதுரை |
| 66 | J. அருள்மேரி | இராஜகம்பீரம் | மானாமதுரை |
| 67 | S. ஜோசப் அருள்ராயன் | இடைக்காட்டூர் | இடைக்காட்டூர் |
| 68 | A. சோபியா தெரஸ் | இடைக்காட்டூர் | இடைக்காட்டூர் |
| 69 | S. ராஜம் சகயாராணி | இடைக்காட்டூர் | இடைக்காட்டூர் |
| 70 | S. வீலா | இடைக்காட்டூர் | இடைக்காட்டூர் |
| 71 | J. இருதய அனிஸ் | இடைக்காட்டூர் | இடைக்காட்டூர் |
| 72 | R. அன்னாள் | இடைக்காட்டூர் | இடைக்காட்டூர் |
| 73 | S. தெரஸ் | இடைக்காட்டூர் | இடைக்காட்டூர் |
| 74 | A. ஆரோக்கிய செல்வராணி | இடைக்காட்டூர் | இடைக்காட்டூர் |
| 75 | P. அமலோற்பவம் | சிவகங்கை | சிவகங்கை |
| 76 | G. மரிய கமலம் | சிவகங்கை | சிவகங்கை |
| 77 | A. அந்தேணிச்சாமி | சிவகங்கை | சிவகங்கை |
| 78 | M. தேவன் | சிவகங்கை | சிவகங்கை |
| 79 | M. மரிய பிரேம்ராஜ் | ஒக்கூர் | சிவகங்கை |
| 80 | A. குழந்தை தெரஸ் | கல்லல் | செக்காலை |
| 81 | V. இருதய சுபிக்ஷா | காளையார்கோவில | காளையார்கோவில் |
| 82 | S. ஜான் கென்னடி | காளையார்கோவில் | காளையார்கோவில் |
| 83 | A. மாணிக்கம் | சூசையப்பர்பட்டணம் | காளையார்கோவில் |
| 84 | G. ஆரோக்கியசாமி | முப்பையூர் | சருகணி |
| 85 | S. கிரேசி | முப்பையூர் | சருகணி |
| 86 | S. மேரி | முப்பையூர் | சருகணி |
| 87 | J. ரோசாலி மேரி | முப்பையூர் | சருகணி |
| 88 | A. ஆக்னஸ் புனிதா | முப்பையூர் | சருகணி |
| 89 | P. அந்தாணி அருள்வளவன் | சி.கே.மங்கலம் | சி.கே.மங்கலம் |
| 90 | R. ஜோஸ்பின் | ஓரிக்கோட்டை | சி.கே.மங்கலம் |
| 91 | S. பால்ராஜ | இராம்நகர் | இராம்நகர் |
| 92 | A. மைக்கேல் தேவதாஸ் | இராம்நகர் | இராம்நகர் |
| 93 | B. ஜோஸ்பின் சீமா | இராம்நகர் | இராம்நகர் |
| 94 | B. இலக்கியா | இராம்நகர் | இராம்நகர் |
| 95 | A. அடைக்கலசாமி | தேவகோட்டை | தேவகோட்டை |
| 96 | D. அனிதா கிறிஸ்டி | தேவகோட்டை | தேவகோட்டை |
| 97 | S. வியாகுலமேரி | தேவகோட்டை | தேவகோட்டை |
| 98 | S. நசரேஸ் | சிலாமேகநாடு | புளியால் |
| 99 | A. தீபிகா | புளியால் | புளியால் |
| 100 | V. ஆரோக்கியஆனந்தி | புளியால் | புளியால் |
| 101 | L. சூசை மாணிக்கம் | புளியால் | புளியால் |
| 102 | V. அந்தோணிராஜ் | ஆவுடைப்பொய்கை | ஆவுடைப்பொய்கை |
| 103 | J. மெட்டில்டா | ஆவுடைப்பொய்கை | ஆவுடைப்பொய்கை |
| 104 | S. அருளாந்துஅந்தோணி சேவியர் | மானகிரி | செஞ்சை |
| 105 | U. செங்கோல் மேரி | செஞ்சை | செஞ்சை |
| 106 | S. டோமினிக் | அமரடக்கி | அமரடக்கி |
| 107 | K. செபாஸ்டின் அருண் டிசோசா | அமரடக்கி | அமரடக்கி |
| 108 | S. இருதய புஷ்பா | அமரடக்கி | அமரடக்கி |
| 109 | A. ஆர்த்தி | அமரடக்கி | அமரடக்கி |

**இப்ப இல்லாட்டி எப்ப?**

நேரம் வரும்வரை காத்திருக்கப் பழக வேண்டும்
அவசரப்பட்டால் நிம்மதி தொலையுமேயன்றி வேறெதுவும் நடக்காது.

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப -எல்லாரோ**

பொறுமையுள்ளோர் தக்க காலம்வரை அமைதி காப்பர்
பின்னர் மகிழ்ச்சி அவர்களுள் ஊற்றெடுத்துப் பாயும் (சீஞ்ரா 1:23)

வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான
இறைவார்த்தைகளும்: **யோவான் 15:15**

இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்லமாட்டேன்.
ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது.
உங்களை நான் நண்பர்கள் என்றேன். ஏனெனில் என் தந்தையிடமிருந்து
நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்.

## "என்னை மன்னியும்"

1. தந்தையைக் கொடுமைப்படுத்தித் தாயை துரத்திவிடும் மகன் வெட்கக் கேட்டையும், இழிவையும் வருவித்திக் கொள்வான் என்பதை மறந்து பெற்றோரைக் கொடுமைப்படுத்தியதற்காக இறைவா என்னை மன்னியும் (நீமொ 19:26).

2. உனக்கு அடுத்திருப்பவர் செய்த அநீதியை மன்னித்து விடு. அவ்வாறெனில் நீ மன்றாடும் போது உன் பாவங்கள் மன்னிக்கப்படும் என்பதை மறந்து, அடுத்தவர் செய்த அநீதியை மன்னித்து மறக்காமல் பகையுணர்வுடன் வாழ்ந்தமைக்காக இறைவா என்னை மன்னியும் (சீராக் 28:2)

3. பழிக்குப் பழியென உன் இனத்தவர் மேல் காழ்ப்புக் கொள்ளாதே. உன் மீது அன்பு கூறுவது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீது அன்பு கூர்வாயாக என்பதை மறந்து பழிக்குப்பழி வாங்கி காழ்ப்புணர்ச்சி கொண்டு வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா என்னை மன்னியும் (லேவி 19:18)

4. தம் சகோதார சகோதரிகளை வெறுப்போர் அனைவரும் கொலையாளிகள் என்பதை மறந்து தம் சகோதர சகோதரிகளை வெறுத்தும் உதாசீனப்படுத்தியும் வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா என்னை மன்னியும் (1 யோவா 3:15)

நற்பணி S.P.**சவரிமுத்து,** இராம்நகர்.

இம் மாத புனிதர்

# புனித தாமஸ் மூர்

அரசியல் தலைவர்களின் பாதுகாவலரான தாம1 மூர் 1477 பிப்ரவரி7ம் தேதி பிறந்தவர். இங்கிலாந்தில் வழக்குரைஞராகவும் பிறகு நீதிபதியாகவும் இருந்த யோவான் மூர் மற்றும் ஆக்னெஸ் ஆகியோரின் மகன். சிறு வயதிலேயே தாயை இழந்தார். மகனை ஒழுக்கத்துடன் வளர்க்க எண்ணிய இவரது தந்தை கான்றால்பரி ஆயரான மார்டீனை சந்தித்து தாழ்ந்து (மத் 11:29) மன்றாடி அவருடைய பொறுப்பில் விட்டார்.

இவர் விவிலியம் சார்ந்த விவாதங்களைக் கேட்க ஆயரிடம் அனுமதி பெற்றார். இவரது ஆற்றலை அறிந்த ஆயர் ஆக்ஸ்போர்டு பல்கலை கழகத்தில் சேர்த்தார். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் யோவான் மூர் மகளை சட்டக் கல்லூரியில் சேர்த்தார். தாமஸ் மூர் வழக்குரைஞரானார்.

இங்கிலாந்து அரசர் 7ம் ஹென்றி காலத்தில் தாமஸ் பாராளுமன்ற உறுப்பினரானார். 27வது வயதில் ஜெயின் காட் என்ற பெண்ணை மணந்தார். பொதுவாழ்விலும். குடும்ப வாழ்விலும் முன்மாதிரிகையாக வாழ்ந்தார். 8ம் ஹென்றி இவரை நீதிபதியாக நியமித்தார். இவரும் ஒப்புரவு அருட்சாதனம் பெற்று துய்மையான மனதுடன் வழக்குகளை தீர்த்து வைத்தார். கிரேக்க மொழியில் எழுதப்பட்ட மூல விவிலியதின் புதிய ஏற்பாட்டைத் தொகுத்தார். பிரான்ஸ் மற்றும் ஐரோப்பாவிற்கு அரச பிரதிநிதியாகச் சென்றார். சபாநாயகராகச் செயல்பட்டார்.

8ம் ஹென்றி தன் மனைவி கேத்தரீனை விவாகரத்து செய்து விட்டு திருத்தந்தைக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றி ஆன்பொலினை மணமுடித்தார். புதிதாக உருவான அரசரின் மாதமான ஆங்கிலிக்கன் திருச்சபையில் சேரவும் கத்தோலிக்கத்தை மறுதலிக்கவும் ஆணை பிறந்தது.

தாமஸ் மூரே நான் கத்தோலிக்கரே என உறுதியுடன் (யோ 19:278) உண்மைக்குச் சான்று பகர்ந்தார். எனவே, சிறையில் அடைத்து, தேசதுரோகம் செய்தார் என்று 1535 ஜூலை 6ம் தேதி கொலை செய்யப்பட்டார். உண்மையை இடைகச்சையாகக் கட்டிக் கொண்டு (எபே 6:4) பணிவாழ்வுப் பயணம் தொடருவோம்.

நற்பணி **ஆரோக்கிய மேரி,** செக்காலை

# ஆடுகளுக்கு வாயில் நானே

ஆண்டவராகிய என் தலைவர் கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார் (எசா 50:4)

இறைவாக்கினர் எசாயா இயேசுகிறிஸ்துவைப் பற்றி தனக்கு கிடைத்த வெளிப்பாட்டை இங்கு குறிப்பிடுகிறார் நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்க என்று கூறியுள்ளபடி, நம் ஆண்டவர் இவ்வுலகில் வாழ்ந்தபோது பல்வேறு வகையான மக்கள் உடல் நலம் குன்றியவர்கள் மனநலம் பாதித்தவர்கள் சாத்தானால் அலைக்கடிக்கப்பட்டு வேதனைபட்டவர்கள் நாள்தோறும் அவரைக்காண ஆவலாய் வந்தார்கள். அவரிடம் வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வெறுமையாய் திரும்பிப் போகவில்லை.

நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்க அவரது நாவில் எப்போதும் உயிருள்ள வார்த்தைகள் இருந்தன. அவர் இறைமகன் எனவே தான் அவரது நாவில் எப்போதும் கடவுளின் வார்த்த இருந்தது நம்மால் அப்படியெல்லாம் முடியாது என்று நாம் சாக்குபோக்கு சொல்லாதபடிக்கு அவர் கடவுளாக இருந்து கொண்டு செயல்படவில்லை, மாறாக கடவுள் வடிவில் விளங்கிய அவர் அதை வளிந்து பற்றிக் கொள்ளாமல் அடிமையின் வடிவை ஏற்று மனித உருவில் தோன்றினார் (பிலி 2:6-7) எல்லாவகையிலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டு முழு மனிதனாக இருந்தார். எபி 4:15 அவர் முழு மனிதனாக இருந்ததால் நாள்தோறும் தந்தைக் கடவுளின் பாதத்தில் அமர்ந்து மறைநூல் அனைத்தையும் நன்கு கற்று அறிந்தார். அவரை இவ்வுலகிற்கு அனுப்பிய தந்தை பாவத்தால் நலிந்து கிடக்கின்ற மக்கள் நாள்தோறும் அவரிடம் வரும்போது அவர்களுக்கு எந்த வார்த்தையைச் சொல்லி தேற்ற வேண்டும் என்று அவருக்குக் கற்றுக் கொடுத்தார். எனவேதான் நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட ஆண்டவராகிய என் தலைவர் கற்றோனின் நாவை எனக்கு அழித்துள்ளார் என்று அவரைப் பற்றி கூறப்பட்டுள்ளது (எசா 50:4).

அவர் உலகில் பணி ஆற்றிய நாட்களில் உண்பதற்கும் உறங்குவதற்கும் கூட நேரமில்லாமல் இருந்தது. எப்போதும் அவரது வாயிலிருந்து ஆறுதல் வார்த்தைகளைக் கேட்க மக்கள் அவரைத் தேடிக்கொண்டே இருந்தார்கள். ஒவ்வொரு நாளும் பலமணிநேரம் பணிசெய்து முடித்துவிட்டு நீண்ட நேரம் கழித்துத்தான் உறங்கச் சென்றிருப்பார். ஆனால் காலையில் வெகுநேரம் அவரால் தூங்க இயலாது. உடல் மிகவும் கலைப்பாகத்தான் இருந்திருக்கும். ஆனால் தந்தைக் கடவுள் அவர் அருகில் நின்று பாசத்தோடு மகனே இன்று உன்னை சந்திக்க வரும் என் பிள்ளைகளுக்கு ஆறுதலாக வார்த்தைகளைச் சொல்லி அவர்களைத் தேற்ற வேண்டுமே என்று அன்போடு அவரை எழுப்பி கற்றுக் கொடுத்தார். எனவே இங்கு அவராக எழுந்ததாக கூறவில்லை. காலை தோறும் அவர் என்னைத் தட்டி எழுப்பி கற்போர் கேட்பது போல் நானும் செவி கொடுக்கச் செய்கின்றார் என்று கூறப்பட்டுள்ளது (எசா 50:4). நமக்குப் இப்படிப்பட்ட அனுபவம்

வரக்கூடாதா? என்று எண்ணத் தோன்றுகிறது. அவர் இரவு பகழ் பாராது நேரம் கிடைக்கும் போதெல்லாம் தந்தையிடம் கற்றுக் கொள்ள அவர் அருகில் சென்றுவிடுவார். ஒவ்வொரு செயல்களிலும் இது என் விருப்பமில்ல என்னை அனுப்பியவரின் விருப்பம் என்றும் நானாக எதையும் பேசவில்லை என் தந்தை கற்றுக் கொடுத்ததையே பேசுகிறேன் என்று அடிக்கடி அவர் கூறுவதை நாம் பார்க்கிறோம்.

அவர் 12 வயது சிறுவனாக இருந்தபோது ஆலயத்தில் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் கூறுவதைக் கேட்டுக் கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டும் இருந்தார். அவரது புரிந்து கொள்ளும் திறனையும் அவர் அளித்த பதில்களையும் கண்டு மலைத்துப் போயினர். ஏனென்றால், அவர்கள் வயது முதிர்ந்தவர்கள், திருச்சட்டம் படித்தவர்கள். நீண்ட நாட்களாக ஆலய குருக்களாக இருப்பவர்கள். ஆனால் ஒரு 12 வயது சிறுவன் அவர்களைக் கேள்வி கேட்டு திணரடிக்கச் செய்கிறார். விவிலிய கலாசாலையின் வாசனையே தெரியாத இவர், போதகர்களைத் தடுமாறச் செய்கிறார் எனில் வெளிப்பாட்டு அறிவுக்கு முன்பாக வெறும் புத்தக அறிவு நிற்காது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. (லூக் 2:46-48).

ஏழை குடும்பத்தில் மின்சார விளக்கு இல்லை. வெறும் கூண்டு விளக்கு வெளிச்சத்தில் தந்தை கற்றுக்கொடுத்த மறையின் பகுதிகளை எவ்வளவு ஆர்வமாய் படித்து அறிந்திருப்பார். அவரிடம் வருபவர்களுக்கு ஏற்ற வார்த்தைகள் அவரிடம் இருந்தன. தனக்கு எதிரானவர்கள் கேள்வி கேட்டபோதும், சாத்தான் அவரை சோதித்தபோதும் மறைநூலை மேற்கோள் காட்டியே அவைகளை தோல்வியுறச் செய்தார். அந்த அளவுக்கு கடவுளின் வார்த்தை அவரை ஆட் கொண்டது. இயேசுவின் நாவு ஒரு கல்வியாளரின் நாவு. எனவே தான் ஆண்டவராகிய என் தலைவர் கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார் என்று அவரைத் குறிந்து கூறப்பட்டுள்ளது (எசா 50:4). அன்று நம் ஆண்டவரைத் தேடிய மக்களைப் போன்று இன்றைக்கும் பாவத்தாலும் அறியாமையினாலும் வீழ்ந்து கிடக்கின்ற மக்கள் ஆறுதலான வார்த்தைகளுக்காக அலைந்து திரிகிறார்கள்.

நாம் சந்திக்கின்ற சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவரைப் போல ஆறுதல் வார்த்தகள் கூற அறிந்திருக்கிறோமோ? ஏனென்றால், ஒரு குருவின் உதடுகள் மெய்யறிவைக் காக்க வேண்டும்: அவனது நாவினின்று திருச்சட்டத்தைக் கேட்க மக்கள் அவனை நாட வேண்டும். ஏனெனில், படைகளின் ஆண்டவருடைய தூதன் அவன் (மலா 2:7). எந்த அளவுக்கு ஆண்டவர் பாதத்தில் அமர்ந்து ஆன்ம தாகத்தோடு அவரது வார்த்தைகளை தியானிக்கிறோமோ அந்த அளவுதான் பணிவாழ்வில் நிறைவு. நம் ஆண்டவரைப்போல நாம் செயல்பட வேண்டுமென்பது தந்தைக் கடவுளின் அலாதி விருப்பம் தம்மால் முன்பே தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் தம் மகனின் சாயலுக்கு ஏற்றவாறு இருக்கு வேண்டுமென்று விரும்புகிறார் (உரோ 8:29). அன்றைக்கு இயேசுவை காலைதோறும் தட்டி எழுப்பிக் கற்றுக் கொடுத்தவர் இன்றைக்கும் அவரது தூய ஆவியாரைக் கொண்டு நம்மையும் தட்டி எழுப்பி கற்றுத்தருவார் எனவே ஆர்வம் கொள்வோம்.

நற்பணி **M.விசுவாசம்,** செஞ்சை.

# நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு
## 2019 ஜீன் மாதப் பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 02 | புதிய பாணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம் /சாயல்குடி காளையார்கோவில் |
| 05 | அருள்அமுதுஆதாரக்குழு கூடுகை | அமைதியகம் / அருள்சான்று நிலையம் |
| 07 | முதல் வெள்ளி ஆராதனை | இரா.சி.மங்கலம் |
| 07 | நற்பணி J. நிர்மலா ஜான்சி ராணி இல்லத் திருமண விழா | இராம்நகர் |
| 08. | புதியபணியார்கள் பயிற்சி | பாம்பன் |
| 08 | பரிந்துரை செபம் | திருஇருதய ஆண்டவர் ஆலயம் இடைக்காட்டூர் |
| 09 | புதியபணியார்கள் பயிற்சி | இராமநாதபுரம்/சிவகங்கை/செக்காலை |
| 09 | வட்டாரத் தியானக்கூட்டம் | சருகணி / CK மங்கலம் மா.மிக்கேபல்பட்டணம் |
| 09 | தூய ஆவியார் பெருவிழா | எல்லா வட்டாரங்களிலும் |
| 15 | வட்டாரத் தியானக்கூட்டம் | பாம்பன் / ஆர்.எஸ் மங்கலம் |
| 16 | புதியபணியாளர்கள் பயிற்சி | அமைதியகம் / சருகணி |
| 16 | வட்டாரத் தியானக்கூட்டம் | சிவகங்கை /ஆவுடைபொய்கை |
| 21 | நற்பணி புனிதா இல்லத்திருமண விழா | த. சூசையப்பர்பட்டணம் |
| 22. | வட்டாரத் தியானக்கூட்டம் | தங்கச்சிமடம் /இராமேஸ்வரம் |
| 23 | வட்டாரத் தியானக்கூட்டம் | மானாமதுரை/ கமுதி /இராம்நகர் |
| 23 | புதிய பணியாளர்கள் பயிற்சி | ஆர்.எஸ் மங்கலம்/ நானாக்குடி |
| 22-23 | பங்குகளில் தொடர்களப்பணி | இருதயபுரம், மூப்பையூர், திருவெற்றியூர் நானாக்குடி, சிலாமேகநாடு, கமுதி சிங்கம்புணரி, ஆவுடைபொய்கை கணக்கன்பட்டி |
| 30. | விரிவாக்க உள்ளூயிர் குழுக் கூட்டம் | அருள்சான்று நிலையம் |

### ஒரு பணியாளரின் மன்றாட்டு

அழைப்புப் பெற்றவர் பலராயினும் சிலரை மட்டுமே தேர்ந்தெடுத்தவரே (மத் 2:14) உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட நாங்கள் உம்மோடு இணைந்திருந்து கனி தரவும் (யோவா 15:4) உம் வார்த்தைகளை கடைபிடித்து வாழவும் (யோவா 8:31) உமக்குத் தொண்டு செய்யவும் (யோ 12:26) பெற்றுக் கொண்ட அழைப்பிற்கேற்ப வாழவும் (எபே 4:1) வேண்டிய ஆற்றலைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறேன்.

அடர்ந்த புல்வெளியும், அழகான வயல்வெளிகளையும் தனக்குச் சொந்தமாக கொண்ட அந்த சுந்தரம்பட்டி என்ற கிராமத்தில் ரவியும், ராஜாவும் நெருங்கிய நண்பர்களாக அவ்வூரில் உள்ள அரசு பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்து வந்தனர். வீட்டிலிருந்து பள்ளிக்கு நடந்து செல்லும் பாதையில் ஏராளமான ஆட்டுபட்டிகளை கடந்து செல்வார்கள். ஒரு நாள் ரவி ராஜாவிடம் "ராஜா நம்ம லீவுல ஊர்சுத்தி பாக்க வீட்டுல காசு தரமாட்றாங்க. அதனால நம்ம ஸ்கூல் முடிஞ்சு வீட்டுக்கு போகும் போது, அந்த ஆட்டு மந்தையில ஓர் ஆட்டு குட்டியை எடுத்து, அடுத்துள்ள ஆட்டுசந்தையில் வித்தா நெறைய காசு தருவாங்க, அத வச்சு ஜாலியா ஊர்சுத்தலாம்" என சொல்ல, ராஜா சுற்று யோசித்துவிட்டு சம்மதம் தெரிவித்தான். அன்றே இருவரும் சேர்ந்து ஓர் ஆட்டுகுட்டியை திருடி சென்று, தனது ஆடுகளை விற்பதற்காக சந்தையில் காத்திருந்த அந்த ஆட்டு முதலாயிடமே பேரம் பேச தொடங்க, இருவரும் கையும் களவுமாக அந்த முதலாளியிடம் மாட்டிக் கொண்டனர்.

மறுநாள், ஓய்வுபெற்ற தலைமையாசிரியரும், ஊர் தலைவருமான ரத்தின மணியிடம் பஞ்சாயத்து நடத்த ஊர் கூடினர். ஆட்டுகுட்டியின் முதலாளி ஆதங்கத்தையும், மாட்டிக் கொண்ட ரவி மற்றும் ராஜா ஆகியோரின் பரிதாப நிலையையும் மனதில் கொண்டு "சின்ன பசங்க ஊர் சுத்தனுங்ற ஆர்வத்துல பண்ணிட்டாங்க, அதனால யாருக்கும் பாதகம் இல்லாம, அவங்களுக்கு ஒரு தண்டணைய கொடுப்போம், அவங்க இரண்டு பேர் நெற்றியிலேயும் ST என ஆதாவது ஆட்டு திருடன் (sheep thief) என்ற ஆங்கில எழுத்தை பச்சை குத்துவோம்" என தீர்ப்பு சொல்ல அதன்படியே அவர்கள் நெற்றியில் ST என எழுதப்பட்டது. இந்த அவமானத்தை தாங்கமுடியாமல் ரவி ஊரைவிட்டு சென்று, மனச்சோர்வாலும், மன அழுத்தத்தாலும் பாதிக்கப்பட்டு சில மாதங்களில் தற்கொலை செய்து கொண்டான். ஆனால் ராஜா நடந்ததை ஒரு பாடமாக உணர்ந்து கொண்டு தனது படிப்பில் கவனம் செலுத்தி நன்றாக படித்து ஒரு வழக்கறிஞராக மாறி, ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வாதாடி வெற்றி பெற்றான்.

காலங்கள் உருண்டோடின, மக்களுக்கு உதவி செய்து வந்த ராஜா ஓர் உயர்ந்த, புனிதமான மனிதராக போற்ற பெற்றார். வழக்கறிஞராக பணி செய்து ஓய்வுபெற்ற பின்பும் பல உதவிகளை மக்களுக்கு செய்து வந்தார். ஆனால் அவர் நெற்றியில் இருந்த ST என்ற அடையாளம் மட்டும் மறையவே இல்லை. அதன் உண்மையான அர்த்தம் தெரிந்த எவரும் உயிரோடு இல்லை. ராஜா, தர்மராஜா என மக்களால் அன்போடு அழைக்கப்பட்டார். ராஜாவிற்கு 89 வயது முடியும் நிலையில் அவரின் உயிர் பிரிந்தது. அவரின் இறப்பை தாங்க முடியாமல் ஊர் மக்கள் அனைவரும் அழுது புலம்பினர். அவருடைய அடக்க சடங்கில் ஊர்மக்கள் அனைவரும் வந்து கலந்து கொண்டனர். அவரின் இறப்பை ஏற்க முடியாமல் தவித்தனர். அவரைப் பற்றி இறங்கல்பா வாசிக்கப்பட்டன. அப்போது அவரின் நெற்றியில் இருந்த ST என்ற எழுத்துக்களுக்கு புனிதர் (SAINT) என்று அங்கு

கூடியிருந்த மக்கள் கூறிக்கொண்டனர். அதுமட்டுமல்ல, ஒட்டுமொத்த இளைஞர்களும், இளம் பெண்களும் தங்கள் நெற்றியில் ST என பச்சை, குத்திக் கொண்டனர்.

சமூகமாக.. இறை சமூகமாக... இணைந்து சிந்திக்கும் நேரத்தில் இந்த கதை நமக்கு ஒரு பாடத்தை கற்று தருகிறது. ஒரே வகையான நிகழ்வு, ஒரே வகையான அவமானம். ஆனால் அதை எடுத்துக்கொண்ட முறை. எடுத்துக்கொண்ட விதங்கள் வேறு, ஒரு முறை ஒரு இளைஞன் ஒரு ஞானியிடம் "எல்லோருக்கும் ஒரே வகையான துன்பங்கள் வந்தாலும் சிலர் வீழ்ந்துவிடுகிறார்கள், சிலர் நன்றாக வாழ்ந்துவிடுகிறார்கள் எப்படி?" என கேட்க, அதற்கு அந்த ஞானி, "உனது கையில், ஒரு திராட்சை, ஒரு எலுமிச்சை, ஒரு தக்காளி பழம், கொடுக்கப்பட்டதாக நினைத்துகொள் அந்த பழங்களுக்கு நீ ஒரே வகையான அழுத்தத்தை தருகிறாய் என வைத்துக்கொள்வோம். அப்போது அந்தந்த பழங்கள் அதன் சாற்றையே (அதற்குள் எது இருக்கிறதோ) வெளியேற்றுகின்றன. அதே போன்று மனிதர்களுக்கு ஒரே விதமான துன்பங்கள் வந்தாலும் அவர்களுக்குள் என்ன இருக்கிறதோ அதுவே வெளிப்படும். துணிச்சல் மிக்கவனுக்கு தன்னம்பிக்கையும், கோழைக்கு தற்கொலை எண்ணமும் தோன்றும். மன அழுத்தம் அனைவருக்கும் பொதுவானது.

சமூகமாக.. இறைசமூகமாக வாழ மிகத் தடையாக இருப்பது மன அழுத்தம் (Depression) என்ற ஒரு நோய். முரண்கள் நிறைந்த வாழ்வு விந்தையானது மட்டுமல்ல, சாவல்கள் நிறைந்ததும் கூட. ஆசை நிராசையானதும் உறவு பிரிவதும் வாழ்வில் வாழ்க்கை சமநிலையில் இருக்கும் மனதுக்கும் அது தெரியும். இருப்பினும், உண்மையை எதிர்கொள்ளும் போது, வாழ்வின் ஏமாற்றத்தையும் பிரிவின் துயரையும் ஏற்றுக்கொள்ள முடியாமல் மனித மனம் தடுமாறும், தடம் மாறும், பின் சில நிமிடங்களிலோ சில மணி நேரத்திலோ சில நாட்களிலோ மனம் தன் இயல்புக்குத் திரும்பும். ஏமாற்றங்களும் பிரிவுகளும் இழப்புகளும் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு, ஆழமானதாக இருந்தால், மனம் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியாமல், சோகத்தில் தேங்கிவிடும். இந்தத் தேக்கநிலை, அதாவது நிஜத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் மனத்தின் போராட்டம் மன அழுத்தத்தின் ஒருவகை என்றால், மூளையில் சுரக்கும் வேதிப்பொருட்களின் குறைபட்டால் ஏற்படும் மன அழுத்தம் மற்றொரு வகை ஆகும்.

மன அழுத்தம் என்றவுடன், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் சோகமாக வலம் வருவார்கள் என்றோ எந்நேரமும் அழுவதற்குத் தயாராக இருப்பார்கள் என்றோ எண்ண வேண்டாம். வாழ்வின் முக்கிய நிகழ்வுகளின் மீதான ஈடுப்பாட்டுக் குறைவே மன அழுத்தம். மன அழுத்தத்துக்கு உள்ளானவர்கள் அதிகமாகவோ, குறைவாகவோ சாப்பிடுவார்கள்; தூங்குவார்கள்; சுற்றத்தை விட்டு விலகுவார்கள்; நட்பைத் தவிர்த்துத் தனிமையை விரும்புவார்கள்; வழக்கமான செயல்களில் நாட்டமின்றி இருப்பார்கள். ஒரு செயலைச் செய்வதற்கான ஆற்றல் குறைந்தவர்களாகவோ ஆற்றல் இல்லாதவர்களாகவோ இருப்பார்கள். வழக்கத்துக்கு மாறாக மறதியுடன் ஒருவிதக் குழப்ப மனநிலையில் இருப்பார்கள் கோபமும் வருத்தமும் பயமும் மிகுந்த ஒருவித விளிம்பு நிலையில் அல்லது உணர்ச்சிகள் வெடித்துவிடும் நிலையில் இருப்பார்கள். தனக்கோ, பிறருக்கோ தீங்கு விளைவிக்கும் எண்ணமும் அவர்களிடம் இருக்கும். நீண்டகால நோய்கள்,

பதற்றம், எண்ணச் சூழல் நிர்ப்பந்த நோய், மனச்சிதைவு போன்ற மனநலம் பிரச்சனைகளோடு மன அழுத்தத்திற்கு தொடர்புண்டு. இது வழக்கமாக இரண்டாண்டுகளோ அதற்கு மேற்பட்ட ஆண்டுகளோ நீடிக்கலாம்.

முன்னர் செய்திகளில் அதிகமாக இடம்பெறாமல் இருந்த இந்த மன அழுத்தம், கடந்த பத்தாண்டுகளில் அதிகமான அளவில் அதிகரித்துள்ளது. 30 கோடிக்கும் அதிகமான மக்கள், அதாவது உலக மக்கள் தொகையில் சுமார் 4 சதவீதத்தினர் மன அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளனர் என உலக சுகாதார அமைப்பு (WHO) 2015ல் வெளியிட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மன அழுத்தத்தால் ஆண்களைவிடப் பெண்கள் அதிக அளவில் பாதிக்கப்படுகிறார்கள் என அந்தப் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. உலக அளவில், மனிதர்களிடமுள்ள குறைபாட்டில் மன அழுத்தமே முதலிடத்தில் உள்ளது. முன்கூட்டியே மரணத்துக்கான காரணங்களில் பத்தாவது இடத்தில் மன அழுத்தம் உள்ளது. 15 வயதுக்கும் 29 வயதுக்கும் உட்பட்டவர்களின் மரணத்துக்கு இரண்டாவது முக்கியக்காரணம் தற்கொலை, தற்கொலைக்கும் மன அழுத்தத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. உலகில் ஒரு நிமிடத்துக்கு இருவர் இதனால் உயிர் இழப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மன அழுத்தத்தைப் பொறுத்தவரை, உலகில் அமெரிக்காவே அதிக மன அழுத்தமுள்ள மனிதர்களைக் கொண்ட நாடாக உள்ளது. அதற்கு அடுத்தபடியாக கொலம்பியா, உக்ரைன், நெதர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன. ஜப்பான், நைஜீரியா, சீனா ஆகிய நாடுகளில் மன அழுத்த பாதிப்பு குறைந்த அளவில் உள்ளது.

மனநோயால் பாதிக்கப்பட்டவர்களைப் பேய் பிடித்துள்ளது என்று கருதி சமூகத்திலிருந்து விலக்கி வைப்பதோ மந்திரவாதிகளைத் தேடிச் செல்வதோ முன்பு வாடிக்கையாக இருந்தன. அந்த காலகட்டத்துடன் ஒப்பிடும்போது இன்று மனநோய் குறித்த விழிப்புணர்வில் முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. இருப்பினும், மன அழுத்தத்தால் பாதிப்புக்கு உள்ளானவர்கள் இன்றும் தவறாகவே புரிந்துகொள்ளப்படுகிறார்கள். நேர்மறை எண்ணங்களை வளர்த்தெடுத்து சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் இருக்குமாறு அவர்களுக்கு எளிதில் அறிவுரை வழங்கப்படுகிறது. மேற்சொன்ன கதையில் இடம்பெற்ற இரண்டு நபர்களில் ஒருவன் தன் நேர்மறை எண்ணத்தால் தனது நெற்றியில் பச்சை குத்தப்பட்ட அந்த வார்த்தைக்கு புது அர்த்தம் கொடுக்கும் வகையில் தனது வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டான். மற்றொருவனோ தனது எதிர்மறை எண்ணத்தால் மன அழுத்தத்திற்கு ஆளாகி தற்கொலை செய்துகொண்டான். நிதி நெருக்கடி, தனிப்பட்ட இழப்புகள், உறவுகளின் பிரிவுகள், நீண்ட நாள் நோய் தாங்க முடியாத வலி, போதைப் பொருட்களின் பயன்பாடு, கடந்த கால அதிர்ச்சிகள், அவமானங்கள் போன்றவற்றால் மனச்சோர்வு ஏற்படக்கூடும் என்பதை மருத்துவ உலகம் இன்று ஏற்றுக்கொண்டு உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தன்னை பற்றிய, சமுதாயத்தைப் பற்றிய நேர்மறை எண்ணம் கொண்டவர்கள் விரைவில் மனச்சோர்வுக்கு ஆளாகமாட்டார்கள்.

**அசைபோட அரை நிமிடம் :**

"நமது மனநிலையும், மனபாங்கும் நமது மன அழுத்தத்தை தீர்மானிக்கின்றன".

-சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.
மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

# கனிவுடையோர் பேறுபெற்றோர்

'கனிவு' தூய ஆவியானவரின் கனிகளில் ஒன்றாகும் (கலா 5:23) ஆகையால். நம்மைக் கடவுளின் கரத்தில் ஒப்புவித்து, அவர் நம்மை வழிநடத்தவும் பயன்படுத்தவும் அர்ப்பணிக்கும் போது கனிவு அல்லது சாந்தகுணம் நம்மில் மலரும். அநீதி செய்யப்படும்பொழுது அதை தாழ்ச்சியோடு பொறுத்துக்கொண்டு, எந்தவித வெறுப்புணர்வுமின்றி தன்னுடைய உரிமைகளை விட்டுக்கொடுப்பவரே கனிவுடையோர். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு இயேசு கிறிஸ்து. "கனிவு" என்றால் என்ன என்பதை இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்ட கீழ்கண்ட இறைவார்த்தையிலிருந்து மிகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

(i) வன்செயல் எதுவும் அவர் செய்ததில்லை; வஞ்சனை எதுவும் அவர் வாயில் இருந்ததில்லை; பழிக்கப்பட்டபோது பதிலுக்குப் பழிக்கவில்லை; துன்புறுத்தப்பட்டபோது அச்சுறுத்தவில்லை; நியாயமாகத் தீர்ப்பு வழங்குவோரிடம் தம்மை ஒப்படைத்தார் (1 பேதுரு 2:22,23)

(ii) இவர் சண்டை சச்சரவு செய்யமாட்டார்; கூக்குரலிடமாட்டார்; தம் குரலைத் தெருவில் எழுப்பவுமாட்டார். (மத் 12:19)

(iii) அவர் ஒடுக்கப்பட்டார்; சிறுமைப்படுத்தப்பட்டார்; ஆயினும், அவர் தம் வாயைத் திறக்கவில்லை; அடிப்பதற்கு இழுத்துச்செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார் (எசா 53:7).

உலகனைத்தையும் வார்த்தையால் படைத்தவர், காற்றையும் கடலையும் அடக்கியவர், இறந்தவரை உயிரோடு எழுப்பியவர். விண்ணிலும் மண்ணிலும் சலக அதிகாரம் உடைய இயேசு கிறிஸ்து எவ்வண்ணமாக கனிவோடு நடந்து கொண்டார் என்பதை எண்ணிப் பாருங்கள். கைகள் கட்டப்பட்டு, கன்னத்தில் அறைந்து, காரி உமிழ்ந்தது, சாட்டையால் அடித்து, ஏளனம் செய்து ஒரு கொலைகாரனைப்போல சிலுவையில் அறைந்தும் அவர் வாய்திறாவாதிருந்தார். இயேசு ஆண்டவர் நினைத்திருந்தால் தனக்கு எதிராக செயல்பட்ட அத்தனை பேரையும் எறும்பை நசுக்குவதைப்போல அழித்திருக்க முடியும். அவர் அப்படிச் செய்யாமல், தன்னை முழுவதும் தந்தையின் திருவுளத்திற்கு அர்பணித்து தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார் (எபி 12:2). இதுவே கனிவு அல்லது சார்ந்த குணம். ஆகவேதான், இயேசுகிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும் அளவுக்கு கடவுளும் அவரை மிகவும் உயர்த்தினார்.

நெபுகத்நேசர், மாவீரன் அலெக்சாண்டர், ஜூலியட்சீசர், நெப்போலியன் போன்ற மாவீரர்கள் சண்டையிட்டு சாதித்து நாடுகளை உரிமையாக்கிக் கொண்டதாக நாம் அறிந்திருக்கிறோம். இதை தான் இவ்வுலகம் மேன்மை எனக் கருதுகிறது. ஆனால் மத் 5:5ல் கனிவுடையோர் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர் என்று சொல்லப்பட்டிருப்பது வியப்பாயிருக்கிறது, கனிவுடையோர் எதையும் உரிமையாக்கிக் கொள்ள முடியாது என்பது மட்டுமல்ல, தங்களுடைய உடைமைகளையும் இழந்து போவார்கள் என்று தான் அறிந்திருக்கிறோம். ஆனால், இயேசு ஆண்டவர் கூறுகிறார் கனிவுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாகிக் கொள்வர் (மத் 5:5)

எனகிறார். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆபிரகாம். தொடக்க நூல் 13ம் அதிகாரத்தில் ஆபிரகாமின் கால்நடை மேய்போருக்கும், லோத்தின் கால்நடை மேய்ப்போருக்கும் தகராறு ஏற்பட்டது. ஏனெனில், அவர்கள் சேர்ந்து வாழ்வதற்கு இடம் போதவில்லை. இந்நிலையில் ஆபிரகாம், லோத்துவிடம் எனக்கும் உனக்கும் உன் ஆட்களுக்கிடையே பூசல் வேண்டாம், ஏனெனில், நாம் உறவினர், நாடு முழுவதும உன் கண்முன் இருக்கிறது அல்லவா? ஆகவே, உனக்கு தேவையான பகுதியை தேர்ந்துகொள்! என்று அதற்கான முன்னுரிமையை லோத்துவுக்கு கொடுத்தார். ஆபிரகாமுக்கு அனைத்து அதிகாரமும் இருந்தும் செழிப்பான நீர்வளம் சிறந்திருந்த யோர்தானின் சுற்றுப்பகுதியை லோத்துவுக்கு விட்டுக் கொடுத்தார். இங்கே, ஆபிரகாமின் கனிவு வெளிப்படுகிறது. இந்த நிகழ்வை இறைவன் பார்த்துவிட்டு, ஆபிரகாமைக் குறித்து பெரும் மகிழ்ச்சி கொண்டார். லோத்து ஆபிரகாமைப் பிரிந்தபின், ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி நீ இருக்கும் இடத்திலிருந்து உன் கண்களை உயர்த்தி வடக்கே, தெற்கே, கிழக்கே, மேற்கே பார், ஏனெனில், நீ காணும் இந்த நாடு முழுவதையும் உனக்கும் உன் வழிமரபினருக்கும் என்றென்றும் கொடுக்கப் போகிறேன் என்று வாக்களித்தார். ஆகவே, ஆபிரகாமைப்போல நாமும் கனிவுடையோராய் செயல்படுவோம். அப்பொழுது இறை ஆசீர் பெற்று பேறு பெற்றோராய் திகழ்வோம்.

நீதியின் பொருட்டு நாம் நம்முடைய உடைமைகளை இழப்பதற்கு ஆயத்தமாக இருந்தால், நமக்கான உரிமைகளுக்கு இறைவனே பொறுப்பெடுத்துக் கொள்வார். மேலான நோக்கத்தோடு விரிந்த கைகளுடன் இயேசுகிறிஸ்து இம்மண்ணில் வாழ்ந்தார். இம்மண்ணிலுள்ள அனைத்தும் தற்காலிகமானது என்பதை எடுத்துக்காட்டினார். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே, என் முகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும் (மத் 11:29) என்கிறார். ஆகவே, கனிவுடையோர் உடலாலும் உள்ளத்தாலும் பலம் இல்லாத கோழைகள் என்று எண்ணிவிடக்கூடாது. பூவுலகின் அனைத்து மாந்தரிலும் மோசே சாந்தமிகு மானிடராய் திகழ்ந்தார் (எண் 12:3) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அவர் சீனாய் மலையிலிருந்து பத்துகட்டளைகள் எழுதப்பட்ட பலகைகளுடன் இறங்கி பாளையத்தை அவர் நெருங்கி வந்தபோது கன்றுகுட்டியையும் நடனங்களையும் கண்ட மோசே கடும் கோபம் கொண்டார். அவர்தம் கையிலிருந்த பலகைகளை மலையடிவாரத்தில் வீசியெறிந்து உடைத்துப்போட்டார். அவர்கள் செய்து வைத்திருந்த கன்று குட்டியை எடுத்து நெருப்பில் சுட்டெரித்தார். பாவச் செயல்களில் ஈடுபட்ட 3000 பேரைக் கொன்றதாக (விப 39:19-28) அறிகிறோம். ஆகவே, கனிவு என்பது பயந்த பலவீனமுள்ள மனிதரிடம் காணப்படும் ஒரு குணம் அல்ல. மாறாக, தங்களை அடக்கியாளும் ஆற்றல் உடையவர்களே கனிவுடையோர். மோசே தன்னுடைய உரிமைகளுக்காக ஒரு போதும் போராடவே இல்லை. அவருடைய தலைமையைப் பரித்துக் கொள்ள மக்கள் வந்தபோதெல்லாம் மோசே வாதாடாமல் ஒவ்வொரு முறையும் முகம்குப்புற மண்ணில் விழுந்து இறைவனிடம் வேண்டினார். ஆகவே, அவருக்குப் பதிலாக இறைவனே, இறங்கி வந்தார்.

கனிவுடையோர் இவ்வுலகின் மீது பற்றற்றவர்கள் இவ்வுலகில் அவர்களுக்கு

கொடுக்கப்பட்டவைகளைக் குறித்து திருப்தியோடு அமைதியான வாழ்க்கை வாழ்பவர்கள். இப்படிப்பட்ட வாழ்க்கை வாழவே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். கடவுளின் திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார் (உரோ8:28) ஆகவே, தூய ஆவியானவர் நம்மை ஆளுகை செய்ய நம்மை முழுவதும். ஒப்புக்கொடுப்போம். இயேசுகிறிஸ்துவின் முடிவில்லா ஆட்சியின் போது கனிவுடையோர் இந்த மண்ணுலகை அல்ல, விண்ணிலிருந்து இறங்கிவரும் புதிய எருசலேமை உரிமையாக்கிக் கொள்வர் என்பதை நம்புவோம். ஆண்டவருக்காக காத்திரு, அவர்தம் வழியைப் பின்பற்று. அப்பொழுது நீ நிலத்தை உடைமையாக்கிக் கொள்ளும்படி அவர் உன்னை உயர்த்துவார் (திபா 37:34).

நற்பணி. **J.ஆரோக்கியசாமி.**

## வட்டார தியானக் கூட்டம் - ஜூன் 2019

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1 | 09 | சருகணி<br>9943632636 | M. விசுவாசம்<br>98442758641 |
| 2. | 09 | C.K. மங்கலம்<br>9443157260 | L. ஆராக்கியசாமி<br>90150579311 |
| 3. | 09 | ம. மிக்கேல்பட்டணம்<br>6381895365 | S. ஜோன்ஸ் மேரி<br>85267854557 |
| 4. | 15 | பாம்பன்<br>8754939480 | Sr. செலின் பிரபா<br>9080520068 |
| 5. | 15 | R.S. மங்கலம்<br>9843752061 | செயலர்<br>9787967272 |
| 6. | 16 | சிவகங்கை<br>9943165532 | K. ஜஸ்டின் கபிரியேல்<br>9443503294 |
| 7. | 16 | ஆவுடை பொய்கை<br>8489703006 | J. மேரி புஷ்பம்<br>9489275861 |
| 8. | 22 | தங்கச்சிமடம்<br>9858998444 | செயலர்<br>9787967272 |
| 9. | 22 | இராமேஸ்வரம்<br>9047998614 | M. மரிய கிரகோரி<br>9486965799 |
| 10. | 23 | மானாமதுரை<br>9442857812 | J. ஆராக்கியசாமி<br>9443157260 |
| 11. | 23 | கமுதி<br>9443210772 | L. ஜோசப் இருதயம்<br>9943165532 |
| 12. | 23 | இராம்நகர்<br>9442959569 | M. மரிய கிரகோரி<br>9486965799 |

வட்டார பொறுப்பாளர்கள் சம்பந்தப்பட்ட தொடர்பாளர்களைத் தொடர்பு கொண்டு குறப்பிட்ட நாளில் வட்டாரக் தியான கூட்டத்தைக் கூட்டி சிறப்பாக நடத்தி அறிக்கையினை அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# நற்செயலால் மிளிரும் தூய வாழ்வு

ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த பெனி என்ற பெண் சொந்தமாக ப்யூட்டி பார்லர் நடத்தி வசதியுடன் வாழ்ந்து வந்தார். இவரது வாழ்வில் ஒரு வேதனையான நிகழ்ச்சி. இதன் காரணமாக விவாகரத்து பெற்று மன அமைதியின்றி இருந்த நாட்களில் இந்தியா வந்திருந்தார். அப்போது அன்னையின் இல்லத்திலிருந்து கிறிஸ்துமஸ் நிகழ்வுகளுக்காக அழைப்புப் பெற்றார். அழகு தேவதையாகச் சென்றார்.

நிகழ்ச்சி நடந்த இடத்தில் வறுமை, ஏழ்மை. இவர் மட்டும் சொகுசு அழகு. இவருக்கே என்னவோ போல இருந்தது. அந்த இல்லங்களைப் பார்வையிட இவர் நடந்து சென்று கொண்டிருந்த போது ஒரு அறை வாசலில் மருந்து நாற்றமும், ஒரு வகையான வீச்சமும் அவர் முகத்தை இறுக்கமாக்கியது. அப்போது ஒரு குரல் "பென்னி இங்கே வா இந்த அம்மாவை ஒரு கை பிடி" என்ற சத்தம் கேட்டு திரும்பிய போது ஒரு பெண்ணின் புண்களைத் துடைத்துக் கொண்டிருந்தார் ஒரு சகோதரி.

பெனி ஒரு கைக்குட்டையை எடுத்து மூக்கைப் பொத்திக்கொண்டு 'என்னால் முடியாது' என்று சத்தமிட்டார். ஆனால் நகரவில்லை. அங்கே சுவரில் இயேசுவின் சேவைச் சித்திரங்களில் அவரின் கண்கள் நிலைத்தன.

அவரின் இதயத்தில் ஒரு தாக்கம் இங்கு படுத்து இருப்பவர்கள் எல்லாம் இயேசுவின் பிள்ளைகள், சேவை செய்பவர்கள் எல்லாம் இயேசுவின் சீடர்கள் என்ற உண்மை வேகம் பெனியின் மனதைத் தாக்கியது. உடனே அங்கு அமர்ந்து தமது கைக்குட்டையை டெட்டாலில் நனைத்துத் நோயுற்றிருந்த பெண்ணின் புண்களைத் துடைத்தார், தமது விசா காலம் முடியும் வரை இந்த சேவையில் நிம்மதி கண்டார். அன்னையிடம் இப்போது போகிறேன். திரும்பி வரும்போது என்னை ஏற்றுக்கொள்ளுங்கள் என்றார்.

அன்னை அவரைத் தட்டிக்கொடுத்து "நீ திரும்பி வரவேண்டாம் உன் மனதில் நற்செய்களைச் செய்யும் அன்பு குடிகொண்டுவிட்டது. உனது சொந்த நாட்டிலேயே இது போன்ற சேவை செய்ய வாய்ப்புகள் வரும், காத்திரு என்றார்.

இவ்வுலகில் செல்வர்களாய் இருப்பவர்கள், இல்லாதவர்கள் யாராக இருந்தாலும் தமது நல்லிணக்கத்தாலும், நற்செயல்களாலும் நிலைவாழ்வை தூய வாழ்வை, அடைய முடியும். நிறைவான, மனதோடு வாழ்வில் பயணிக்க முடியும், உலக வாழ்வை அர்த்தத்தோடு வாழ்ந்து வாழ்க்கைக்கு முழுமை கொடுக்க முடியும்

என்பதனை விளக்கும் விவிலியப் பகுதிகளை சற்றே தியானிப்போம். ஏனெனில் நற்செய்தி "நல்லதோர் வாழ்வுக்கு அடித்தளம்" உண்மை வாழ்வின் வழித்தடம்.

**சக்கேயு பெற்றுக் கொண்ட தூய வாழ்வு :**

பாவியான சக்கேயு இயேசுவின் வரவால் புதியமாற்றம் பெற்றார். எதையெல்லாம் பெரிதென்று எண்ணி உயர்த்தி பிடித்துக் கொண்டிருந்தாரோ அவையெல்லாம் இயேசுவுக்கு முன்னால் ஒன்றுமேயில்லை என்பதை உணர்ந்து கொண்டார், சக்கேயு உள்ளம் இயேசுவின் உள்ளத்தோடு ஒட்டிக்கொண்ட அருமையான தருணம் அது.

அங்கிருந்த மக்கள், 'இவர் பாவியிடம் தங்கப் போயிருக்கிறாரே' என்று இயேசுவைக் குற்றப்படுத்திப் பேசியபோது சக்கேயு எழுந்து நின்று தம் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்து விடுவதாகவும், தாம் யார் மீதாவது பொய்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் அதை நான்கு மடங்காக திருப்பித் தந்துவிடுவதாக வாக்குக் கொடுக்கிறார் (லூக் 19:1-10).

ஆண்டவரின் அன்பு அது ஆன்மாக்களை அழகாக்கி விடுகிறது. இறை அன்புக்கு ஈடானது எதுவுமில்லை என்பதை கண்டு கொள்கிறது. இழக்க முன் வருகிறது. நற்குணங்கள் தூண்டப்படும் போது அது நல்லிணக்கமாக சுடர்விடுகிறது. நற்செயல்கள் அதன் வெளிச்சமாகிப் போகிறது. கீழ் நோக்கி வேர்விடும் அன்பு மேல்நோக்கி செழித்து வளர்ந்து கனிகளைத் தரும் மரம் போல சக்கேயுவின் நற்செயல்கள் அவரை தூய வாழ்வில் மிளரச் செய்தது, மீட்பைப் பெற்றுத் தந்தது. "நன்மை செய்யவும்", பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள் இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை (எபி 13:16) என்கிறது எபிரேயர் திருமுகம்.

**நற்செயலால் மிளிர்ந்த சமாரியர் :**

சக்கேயு இயேசுவின் பிரசன்னத்தால் அவரின் ஆளுமையால் ஈர்க்கப்பட்டு மனம் மாறியவர். ஆனால் இந்த நல்ல சமாரியர் இயல்பாகவே நல்லவராக நற்செயல்கள் செய்வதை நம் நற்செய்திப் பகுதியில் தெரிந்து கொள்ளலாம்.

'உங்கள் விண்ணகத் தந்தை இரக்குமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்' என்கிறார் நம் இயேசு. அன்பும், இரக்கமும் இருக்கும் இதயத்திலிருந்து நற்செயல்கள் ஊற்றெடுக்கும் என்பது நல்ல சமாரியர் உவமை கற்றுத் தரும் பாடம்.

கள்வர்கள் ஒரு மனிதனை அடித்து அவரைக் குற்றுயிராக்கி விட்டுப் போய்விட்டனர். குரு, லேவியர் இருவரும் விலகி மறுபக்கமாய் சென்றுவிட சமாரியர் காயப்பட்டவரின் அருகில் வந்து உதவினார். அவர் இவ்வுதவியை செய்யவில்லையென்றாலும் யாரும் ஏன் என்று கேட்கப்போவதில்லை. ஆனால் பரிவுள்ள மனிதனால் மனதை கல்லாக்கி கடந்து செல்ல முடியாது.

அவரது மனமே கேள்வி கேட்கும், குத்திகிழிக்கும். இந்த சமாரியர் தமது உடலிலும், மனதிலும், ஆன்மாவிலும் நல்லிணக்கம் கொண்டிருந்தவராக இருந்ததினால் உடன் உதவிக்கரம் நீட்டுகிறார். காயப்பட்டவரின் காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்து அவற்றைக் கட்டி அவரை தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றிக் கொண்டு நடந்து சென்று சாவடிக்கு கொண்டு சென்று கவனித்துக் கொண்டார். தம்மிடமிருந்து பணத்தையும் சாவடிப் பொறுப்பாளரிடம் கொடுத்து 'இவரை கவனித்துக் கொள்ளும் இதற்கு மேல் செலவானால் நான் திரும்பி வரும்போது உமக்குத் தருவேன்' என்று அவர் சொன்னது அவரின் மேம்பட்ட மனதை, தூயஉள்ளத்தை, முழுமையான பொறுப்புணர்வை வெளிப்படுத்துகின்ற செயலாகும்.

அடிபட்டு இருப்பவர் யார்? எவர்? என்று பாராது எவ்விதமான எதிர்பார்ப்புமின்றி

செய்கின்ற உதவி.ள அது நிபந்தனையற்ற அன்பில் பிறக்கின்றது. பரந்த மனப்பான்மையுடன் இறை மதிப்பீடுகளின் படி இயல்பாய் செயல்படுகின்ற உள்ளம்... அது இறைவனுக்குந்தது. "நிலையில்லாச் செல்வத்தின் மீது நம்பிக்கை வைக்காமல்... எல்லாவற்றையும் நிறைவாக அளிக்கும் கடவுளை மட்டுமே எதிர்நோக்கி இருந்து, நல்லதைச் செய்து நற்செயல்கள் என்னும் செல்வத்தைச் சேர்த்து வைப்பார்களாக, தங்களுக்குள்ளதைத் தாராள மனத்தோடு பகிர்ந்தளிப்பார்களாக (1 திமொ 6.18) என்கிறார் தூய பவுலடியார் 'இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கிறார்' (மீக்கா 6.8) காலத்தால் செய்யும் உதவிக்கு ஆண்டவர் தூய வாழ்வை பரிசாக அளிக்க காத்திருக்கிறார். நற்செயல்கள் மனித உறவுகளை தோழமை படுத்துகின்றன. வாழ்வின் அர்த்தங்களை உணர்த்துகின்றன. தனக்காக வாழாமல் பிறர்க்காக, இச்சமுதாயத்திற்காக, உலகிற்காக வாழ்வோரை இவ்வுலகு என்றும் மறக்காது. இறைவனும் "நீ எனக்கு உரியவன்" என்று இறை சமூகத்தில் ஏற்றுக் கொள்வார்.

**நால்வரின் நற்செயல் :**

நான்கு பேர் சேர்ந்து, இயேசு கற்பித்துக் கொண்டிருந்த இடத்தில் முடக்குவாதமுள்ள ஒருவரைக் கட்டிலோடு கூரைமேல் ஏறி ஓடுகளைப் பிரித்து அவ்வழியாய் இயேசுவின் முன் கொண்டு போய் நிறுத்தினார்கள். இது ஒரு கடினமான செயல். அவர்களுக்கு சுற்றியிருந்த மனிதர்களால். அந்த வீட்டினரால் எதிர்ப்பு உண்டாகியிருக்கும். அதையும் தாண்டி ஒரு முடக்கு வாதமுற்றவரை வீட்டில் மேல் ஏறி சென்று இறக்குவது என்பது மிகவும் கடினமாகவே இருந்திருக்கும்.

ஆனால் அவர்களின் எண்ணம் உயரியது, படுக்கையோடு வீணாகிப் போன மனிதரைக் கண்டு அவர் வாழ்வு பெற வேண்டும். இயேசு ஒருவரே அவருக்கு வாழ்வளிக்க வல்லவர் என்பதை ஒரு மனப்பட்டு அறிந்தவர்களாய் அக்காரியத்தில் இறங்கி வெற்றி கண்டனர்.

இந்நிகழ்வால் அந்த நால்வரின் நல்லிணக்கமே நற்செயலைக் கொணர்ந்தது. ஒருவர் மேட்டுக்கும் ஒருவர் பள்ளத்திற்கும் இழுத்திருந்தால் முடக்குவாதமுற்றவர் உடல்நலமோ, பாவமன்னிப்போ, பெறாமலேயே போயிருந்திருக்கலாம் அவர்களின் ஒருமித்த சிந்தனை செயல்வடிவம் பெற்று அங்கே அற்புதம் நிகழ்ந்தது.

'கிறிஸ்துவிடமிருந்து நீங்கள் ஊக்கம் பெற்றுள்ளீர்களா? அன்பினால் ஆறுதலும், தூய ஆவியினால் தோழமையும் பரிவுள்ளமும் இரக்கமும் கொண்டுள்ளீர்களா? அப்படியானால் நீங்கள் ஒரே எண்ணமும், ஒரே அன்பும், ஒரே உள்ளமும் கொண்டவராய் திகழ்ந்து ஒரு மனத்தவராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள் (பிலி 2:1.2) என்கிறார் கடவுளின் மனிதாய் வாழ்ந்து பணிசெய்த தூய பவுலடியார்.

தொடர்ந்து அவர் "கட்சி மனப்பான்மைக்கும், வீண் பெருமைக்கும் இடம் கொடுக்காமல் மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவராக கருதுங்கள். உங்களை சார்ந்தவற்றில் அல்ல பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்" (பிலி 2:3-5) என்று அறிவுரை புகட்டுகிறார்.

ஆம் பணியாளர்கள் ஒன்றிணைந்து நல்லிணக்கத்தோடு செயல்படும்போது நற்செயல்கள் இயல்பாய், இசைவாய் எங்கும் நடக்கும் அந்த நற்செயல்கள்

நமக்கும், பிறர்க்கும் தூய வாழ்வாய் மிளிரும். மிக என்பது உறுதி. ஆண்டவர் தம் இறுதி தீர்ப்பு நாளில் இதைத்தான் கேட்கப் போகிறார்.

'பசியாய் இருந்தேன் எனக்கு உணவு கொடுத்தீர்கள்... தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள்... மிகச் சிறியோராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்' (மத் 25:35-40) நற்செயல்கள் தான் நமக்கு விண்ணகத்தை அளிக்கும் ஏற்படாக இருக்கின்றது.

நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவும், நம்மீது அன்புகூர்ந்து தம் அருளால் நிலையான ஆறுதலையும், எதிர்நோக்கையும் அளித்த தந்தையாம் கடவுளும் 'நம் உள்ளங்களுக்கு ஊக்கமளித்து நல்லதையே சொல்லவும் செய்யவும் நம்மை உறுதிப்படுத்துவராக.

'நம் நல்லெண்ணம் ஒவ்வொன்றையும் நம்பிக்கையால் தூண்டப்படும் ஒவ்வொரு செயலையும் தம் வல்லமையால் நிறைவுறச் செய்வராக' (தெச 1:11).

நற்பணி **ஜெஸி**, சென்னை

3-ம் பக்க தொடர்ச்சி

- சிவகங்கை மறைமாவட்டம் இனம் காணப்பட்டோர் அறிமுகப்பயிற்சி மே 26ம் தேதி அன்ற காயாவயல் அமைதியகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.சகாயராஜா, நற்பணி S.ஆரோக்கியசாமி, அருள்சகோ செலின் பிரபா CK ஆகியோர் வழிநடத்தினர்.
- சிவகங்கை மறைமாவட்டம் இனம் காணப்பட்டோர் அறிமுகப்பயிற்சி மே 26ம் தேதி அன்று சருகணி புனித பவுல் உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இப்பயிற்சியினை நற்பணி J.அருள்இளங்கோ, நற்பணி.P. பிரகாசம், நற்பணி X.சகாயலூயி ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினர்.
- சிவகங்கை மறைமாவட்டம் இனம் காணப்பட்டோர் அறிமுகப்பயிற்சி மே 26ம் தேதி அன்று ஆர்.எஸ்.மங்கலம் தூய ஆவியார் கோவிலில் நடைபெற்றது.இப்பயிற்சியை நற்பணி J.மேரிபுஷ்பம், நற்பணி J.ஆரோக்கியசாமி, நற்பணி A.ஜான்சிமேரி ஆகியோர் வழிநடத்தினர்.
- சிவகங்கை மறைமாவட்டம் இனம் காணப்பட்டோர் அறிமுகப்பயிற்சி மே 26ம் தேதி அன்று நானாக்குடி புனித அமலோற்பவ மாதா கோவிலில் நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M.விசுவாசம், நற்பணி A.R.சூசைராஜ், நற்பணி S.அந்தோணி பிரகாஷ் ஆகியோர் வழிநடத்தினர்.
- சிவகங்கை மறைமாவட்டம் இனம் காணப்பட்டோர் அறிமுகப்பயிற்சி மே 26ம் தேதி அன்று காளையார்கோவில் புனித அருளானந்தர் கோவிலில் நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.சேசுராஜா, நற்பணி A.சூசை அருள்மேரி, நற்பணி V.செங்கோல் மேரி ஆகியோர் வழிநடத்தினார்.
- சிவகங்கை மறைமாவட்டம் இனம் காணப்பட்டோர் அறிமுகப்பயிற்சி மே 26ம் தேதி அன்று செக்காலை புனித சகாயமாதா கோவிலில் நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.ஜோன்ஸ்மேரி, நற்பணி L.ஆரோக்கியசாமி, நற்பணி R.S.ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினர்.

நற்செய்திப் பணிக்குமுவின்
இணைய தளம் www.arulchandrunilayam.org

1. நன்மைசெய்ய தெரிந்திருந்தும் அதைநீ செய்யவில்லை எனில் அதுஉனக்குப் பாவம்.
2. நன்மைசெய்து பகிர்ந்து வாழமறவாதே ஏனெனில் கடவுளுக்கு மிகவும்உகர்ந்து இவ்வகைபலியே
3. தக்ககாலத்தில் அறுவடைசெய்யும் பொருட்டு நன்மை செய்வதில் நீமனம் தளரவேண்டாம்
4. எளியோர்க்கு நன்மை செய் இறைபற்றற்றோருக்கும் கொடுபாவிகட்கு நீஎதுவும் செய்யவேண்டாம்
5. நன்மை செய்வோர் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் தீமைசெய்வோர் என்றுமே கடவுளைக்காணார்
6. நன்மைதீமை வாழ்வுசாவு இவற்றை இடைவிடாது நம்மைஆண்டு நடத்துவது நம்நாவே
7. சிங்கக்குட்டி உணவின்றி பட்டினிகிடப்பினும் ஆண்டவரை தேடுவோருக்கு நன்மைஏதும் குறையாது
8. இறைபணிக்கு அழைக்கப்பட்டவர் நன்மைக்கே தூயஆவியார் அவரில் அனைத்திலும் ஒத்துஉழைக்கிறார்
9. தூயாவிவல்லமையால் தீயாவி பிடித்தவரை இயேசுவிடுவித்து எங்கும் நன்மைசெய்து கொண்டேசென்றார்
10. பகைவர்க்கன்பு வெறுப்போருக்கு நன்மை சபிப்போருக்குஆசி இதுஏசு நமக்குக் கற்றுத்தந்தபாடம்

**இறைக்குரல்**

**நன்மை**

நற்பணி: M.**சந்தியாகு,** மேலமங்கலம்.

**செப வீரர்களுக்கு**

## இம்மாத செபக் கருத்து

- அருள்பணியாளர்கள் தோழமை உணர்வோடு விளிம்புநிலை மக்களுக்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்து செயல்பட
- மத்தியில் அமைந்துள்ள புதிய அரசு சமயச்சார்பின்மையை வலுப்படுத்தி, பாரபட்சமின்றி எல்லோருக்கும் பணியாற்றும் அரசாக அமைந்திட
- புதிய கல்வி ஆண்டைத் துவக்கும் கல்வி நிறுவனங்கள் மற்றும் மாணவ, மாணவியருக்காக
- நல்ல மழைபெய்து வறட்சி நீங்க
- புதிய பணியாளர்கள் பயிற்சியை துவங்குவோர் ஆர்வத்துடன் பயிற்சியில் ஈடுபட
- செப்டம்பர் மாத இறுதியில் நடைபெறப்போகும் நற்செய்திப் பணியாளர்களின் கூடுகை நிகழ்வுக்காக
- நற்செய்திப் பணியாளர்கள் ஆவியானவரால் இயக்கப்படும் வாழ்வு வாழ

**இம்மாத இறைவார்த்தை:** "தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார் (உரோ 8:26)

**விரும்பத்தக்க செயல்பாடு :** காலை செபத்தில் உங்களையும், குடும்பங்களையும், நாட்டையும், திருஅவையையும், பங்கையும் தூய ஆவியாரின் ஆளுகைக்கு அர்ப்பணித்து செபித்தல்.

அர்ப்பணத் தயாரிப்பு தியானம் - அருள்சான்று நிலையம்

புதிய பணியாளர்கள் அறிமுகப் பயிற்சி - செக்காலை

புதிய பணியாளர்கள் அறிமுகப் பயிற்சி - சருகணி

## விண்ணகப் பிறப்பு

புளியால் வட்டாரம்
நற்பணி. A. தார்ஸ் சில்லா
19.06.2019 அன்று விண்ணகப் பிறப்படைந்தார்.
இவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாரட்டும்.

படங்களைத் தொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.
துப்பு வேண்டுமா? மாற்கு 9,10,11 அதிகாரங்கள்

அர்ப்பண விழா - காளையார்கோவில்

**Narseithi Paniyalar**

is published on behalf of the Commission for Proclamation, Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Vendhoni (B.P.O.) Paramakudi - 623 701, Ramnad Dist. Tel : 04564- 230453.

www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com

(தனிச்சுற்றுக்கு மட்டும்)